


முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தி.மு.க சென்னை தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் ஈஞ்சம்பாக்கம் கடலில் நடைபெற்ற, நைனார் குப்பம் முதல் ஊரூர் வரை உள்ள 13 மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர் குழுவினர் பங்கேற்ற படகு போட்டியை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் (9.3.2025) கொடியசைத்து தொடங்கி வைத்து, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா உள்பட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தி.மு.க சென்னை தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் ஈஞ்சம்பாக்கம் கடலில் நடைபெற்ற நைனார் குப்பம் முதல் ஊரூர் வரை உள்ள 13 மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர் குழுவினர் பங்கேற்ற படகு போட்டியை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.3.2025) நடுக்கடலுக்குச் சென்று கொடியசைத்து தொடங்கி வைத்து, முதலாவதாக வந்த மீனவர் குழுவினருக்கு இயந்திரப் படகினை பரிசாக வழங்கினார். அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா ஆகியோர் உடனிருந்தனர்.

# மீனவ மக்களுக்கு நம் முதலமைச்சர் என்றைக்கும் துணை நிற்பார்! மீனவ மக்கள் நீங்கள் எப்போதும் முதல்வருக்குத் துணை நிற்பீர்!

## சென்னை தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் நடைபெற்ற - 13 மீனவ கிராமங்கள் ‘படகுப் போட்டி’ விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

சென்னை, மார்ச் 11–

**முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை தெற்கு மாவட்டக் கழகம் சார்பில், 13 மீனவ கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு `படகுப் போட்டி' நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு போட்டிகளைத் தொடங்கி, நடத்தி வைத்து பரிசுகளையும், 2 ஆயிரம் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.**

**அப்போது அவர் மீனவ மக்கள் உட்பட அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கழக அரசு செயல்படுத்தி வரும் நலத்திட்டங்களை எடுத்துரைத்துச் சிறப்புரையாற்றினார்.**

மேலும் அவர், `நாடாளுமன்றத் தொகுதி மறுவரையறை, மும்மொழிக் கொள்கை என தமிழ்நாட்டின் அரசியல் உரிமை மொழி உரிமையை அபகரிக்க நினைக்கும் பாசிஸ்ட்டுகளை வீழ்த்தி, 2026 சட்டமன்றத் தேர்தலில் கழக அணியை 200க்கும் அதிகமான தொகுதிகளில் வெல்லச் செய்வோம்' எனக் கேட்டுக் கொண்டார்.

அப்போது அவர் ஆற்றிய உரை வருமாறு:

திராவிட மாடல் நாயகர் முதலமைச்சரின் பிறந்த நாளை முன்னிட்டு, தெற்கு மாவட்டக் கழகம் சார்பாக நடத்தப்படுகின்ற படகுப் போட்டியை தொடங்கி வைத்து, பரிசளித்து, மற்றும் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகின்ற நிகழ்ச்சியில் பங்கேற்று உங்களை சந்திப்பதில் மிகுந்த பெருமை அடைகிறேன். குறிப்பாக, நயினார்குப்பம் முதல் ஊரூர் வரை உள்ள 13 மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவ சமுதாய மக்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

முதலில் மூன்றாம் பரிசு பெற்ற ஈஞ்சம்பாக்கம் குப்பத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி, இம்மானுவேல் அவர்களுக்கும், இரண்டாம் பரிசைப் பெற்ற ஈஞ்சம்பாக்கம் குப்பத்தைச் சேர்ந்த, சகோதரர் வீரன், மோகன் அவர்களுக்கும், முதல் பரிசைத் தட்டிச் சென்ற, கொட்டிவாக்கம் குப்பத்தைச் சேர்ந்த சகோதரர் மோகன், கண்ணன் அவர்களுக்கும், போட்டியில் பங்கேற்ற அனைத்து பங்கேற்பாளர்களுக்கும், என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு என்ன பரிசு கொடுக்கப் போகிறோம் என்று அண்ணன் சுப்பிரமணியன் அவர்களிடம் விசாரித்தேன். முதல் பரிசாக விசைப்படகு தருவதாகவும், இரண்டாவது மூன்றாவது பரிசாக படகு மற்றும் மீன்பிடி வலைகள் தருவதாகவும் அவர் சொன்னார். ஆகவே மீனவர்களுக்கு, என்ன பரிசு கொடுத்தால் அவர்கள் மகிழ்ச்சி அடைவார்களோ, அந்தப் பரிசைத் தேர்ந்தெடுத்து அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்கள் வழங்கி இருக்கிறார்.

### நிகழ்ச்சியில் தனித்துவம்

அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்களைப் பொறுத்தவரை, மாதத்திற்கு அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு நிகழ்ச்சிக்குத்தான் தேதி வாங்குவார். ஆனால் அப்படி வாங்குகின்ற ஒவ்வொரு நிகழ்ச்சியும் தனித்துவமாக மிகச் சிறப்பாக இருக்கும். அதை நான் தவிர்க்கவும் முடியாது.

அண்ணன் மா. சுப்பிரமணியன் அவர்கள் இங்கு பேசும்போது, அண்ணன் கருணா அவர்களின் பெருமையைப் பற்றியும், இந்த நிகழ்ச்சியை எவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்து இருக்கிறார் என்றும் பேசினார். அவர் ஒன்றை மட்டும் குறிப்பிடத் தவறிவிட்டார். அவர் என்னிடத்தில் வரும்போது சொன்னார். சென்ற உள்ளாட்சி மன்றத் தேர்தலில் இங்கு கவுன்சிலர் சீட் கேட்டு விண்ணப்பித்திருந்தார்.




பல்வேறு காரணங்களால் அவருக்கு சீட் கொடுக்க முடியவில்லை. வேறொருவரை வேட்பாளராக திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலிருந்து அறிவித்து விட்டார்கள். இருந்தாலும் சுயேட்சையாக நின்று வெற்றி பெற்றவர்தான் அண்ணன் கருணா அவர்களின் மனைவி. அந்த அளவிற்கு இந்த இடத்தில் மக்கள் செல்வாக்கைப் பெற்றவர். வெற்றிபெற்ற அடுத்த நிமிடமே, எந்தக் காலத்திலும் நான் தி. மு. க. தான் என்று சொல்லி தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டவர்தான் கருணா அவர்களும், அவரின் மனைவி அவர்களும். அவர்களுக்கு மீண்டும் இந்த நேரத்தில் எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### உடனுக்குடன் தீர்வு!

நான் இரண்டு நாட்களுக்கு முன்பு திருவாரூர் மாவட்டத்திற்கு சுற்றுப்பயணம் சென்ற போது, மருதுவாச்சேரி என்ற பகுதிக்கு சென்றேன் . அங்குள்ள தாய்மார்கள் எனது காரை மறித்து, அங்கு இருக்கின்ற ஒரு டாஸ்மாக் கடையை உடனடியாக மூட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். உடனடியாக தலைவரிடம் சொல்லி, டாஸ்மாக் கடையை இழுத்து மூடினோம். எந்தப் பிரச்னை இருந்தாலும் தீர்த்து வைப்போம் என்று அந்த மகளிரிடம் சொன்னோம். நம் முதலமைச்சர் மகளிருக்கான ஆட்சியாக ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து செய்து கொண்டிருக்கிறார்.

பலவணங்குடி என்ற கிராமத்திற்கு சென்ற போது, மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுடன் கலந்துரையாடினேன். அங்கு இருக்கின்ற ஐந்து சகோதரிகள் எங்களுக்கு வீடு இல்லை, பட்டா இல்லை என்று கோரிக்கை வைத்தார்கள். உடனே அதற்கான உத்தரவு போட்டு மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்கு வீட்டுக்கான பட்டாக்களையும், அவர்களுக்கான வீடுகளையும் உடனே தந்தோம்.

அங்கு இருக்கின்ற வீரன் நகர் பகுதியில் வசிக்கக் கூடிய நரிக்குறவர்கள் சமூகத்தினர் ஒரு கோரிக்கை வைத்தார்கள். வீடுகள் எல்லாம் ஆக்கிரமிப்பில் கட்டப்பட்டிருக்கிறது எங்களுக்குப் பட்டா கொடுக்க மாட்டோம் என்கிறார்கள், எங்களுக்கு வீட்டுமனை பட்டா கொடுங்கள் என்று கோரிக்கை வைத்தார்கள். அருகில் உள்ள கொற்கை என்ற நகரில் அவர்களுக்கு வீடு மட்டுமல்ல, வீட்டிற்கான பட்டா மட்டுமல்ல, வீடு கட்டுவதற்கு ஐந்து லட்சம் ரூபாய் நிதியும் ஒதுக்கித் தாருங்கள் என்று கோரிக்கை வைத்து ஆறு மணி நேரத்தில் நானே அவர்களின் வீட்டிற்கு சென்று வீடு கட்டும் ஆணையைக் கொடுத்தேன். அதுதான் நம் திராவிட மாடல் அரசு.

### கழக அரசின் சாதனைகள்!

இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால், நம் முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து செய்துகொண்டிருக்கிறார். நேற்று மகளிர் தின விழா. உங்கள் அனைவருக்கும் நம் முதலமைச்சர் அவர்கள் மகளிர் தின வாழ்த்துக்களை தெரிவித்து இருந்தார். இன்னும் சொல்லப்போனால் இந்த ஆட்சியில் மார்ச் எட்டாம் தேதி மட்டும் மகளிர் தினம் கிடையாது. இந்த ஆட்சி அமைந்ததில் இருந்து ஒவ்வொரு நாளும் மகளிர் தினம்தான். அந்த அளவுக்கு மகளிருக்கான திட்டங்களை ஒவ்வொன்றாக, பார்த்துப் பார்த்து செய்து கொண்டிருக்கிறார் நம் முதலமைச்சர் அவர்கள்.


கழக ஆட்சி அமைந்த பிறகு நம் முதலமைச்சர் போட்ட முதல் கையெழுத்தே மகளிருக்காகத்தான். மகளிர் விடியல் பயணம் திட்டத்திற்குத்தான் முதல் கையெழுத்திட்டார். இதுவரை 620 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு மகளிரும் இந்த திட்டத்தின் மூலம் மாதம் 900 வரை சேமிக்கிறார்கள்.

மகளிர் பள்ளியில் படித்தால் மட்டும் பத்தாது, உயர்கல்வி படிக்க கல்லூரிக்கு செல்ல வேண்டும். அதற்காக அரசுப் பள்ளியில் படித்து எந்த கல்லூரிக்கு சென்று உயர் கல்வி படித்தாலும், மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தில் மாதம் ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகையை வழங்குகிறார் முதலமைச்சர் அவர்கள்.

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத இன்னொரு திட்டம் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். நம்மைப் பார்த்து இப்போது மற்ற மாநிலங்களில் இத்திட்டத்தை தொடங்க ஆரம்பித்து இருக்கிறார்கள். 10 லட்சம் குழந்தைகள் இத்திட்டத்தில் பயன்பெற்று வருகிறார்கள். இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக ஒரு திட்டம். கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம். ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 15 லட்சம் மகளிர் இந்த திட்டத்தின் வாயிலாக, மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையாக வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

### மீனவர்களுக்கான திட்டங்கள்!

நம் மீனவர்களுக்கும் கழக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கிறது. மீனவர் நல வாரியத்தின் உறுப்பினர்கள் இயற்கை மரணமடையும்போது அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு 15,000 ரூபாய் என்றிருந்த நிவாரணத் தொகையை, நம் முதலமைச்சர் அவர்கள் 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி இருக்கிறார். அதேபோல் மீன்பிடிப் படகுகளுக்கு எடுக்கும் உரிமங்களை ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்க வேண்டும். நம் முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு அந்த உரிமைகளை ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்க தேவையில்லை, மூன்று வருடங்களுக்கு ஒரு முறை புதுப்பித்தால் போதும் என்று விதிகளைத் தளர்த்தியுள்ளார்.



முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தி.மு.க சென்னை தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் ஈஞ்சம்பாக்கம் கடலில் நடைபெற்ற, நைனார் குப்பம் முதல் ஊரூர் வரை உள்ள 13 மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர் குழுவினர் பங்கேற்ற படகு போட்டியை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடுக்கடலுக்கு சென்று கொடியசைத்து தொடங்கி வைத்து பார்வையிட்டார். அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

சென்ற 2023ஆம் ஆண்டு ராமநாதபுரத்தில் மிகப்பெரிய மீனவர் மாநாட்டைத் தலைமை ஏற்று நடத்தினார். மீன்பிடித் தடைக்கால நிவாரணத்தை 5 ஆயிரத்திலிருந்து 8,000 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தவர் நம் முதலமைச்சர் அவர்கள். நாட்டுப் படகுகளுக்கு வழங்கப்படுகின்ற மானிய விலை மண்ணெண்ணெய்யின் அளவை ஆண்டிற்கு 3,400 லிட்டரில் இருந்து 3,700 லிட்டராக உயர்த்திக் கொடுத்தவர் நம் முதலமைச்சர் அவர்கள். இப்படிப் பல்வேறு திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் பார்த்துப் பார்த்து செய்து கொண்டிருக்கிறார்.

பொதுவாக மீனவ மக்களை சந்திக்கும் போது எனக்கு ஒரு தனி உற்சாகமும், தன்னம்பிக்கையும் ஏற்படும். அதுதான் இந்த நிகழ்ச்சியின் மூலமும் ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால், தமிழ்நாடு முழுக்க எப்போது மழை வந்தாலும் மக்களைக் காக்க முதல் ஆளாக தெருவுக்கு வந்து பணிகளில் ஈடுபடுவது மீனவ மக்களாகிய நீங்கள்தான். 2023 ஆம் ஆண்டு வந்த மிக்ஜாம் புயலாக இருந்தாலும் சரி, கடந்த ஆண்டு ஃபெங்கல் புயல் நேரத்திலும் சரி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்கள் கேட்காமலேயே களத்தில் உதவிக் கரம் நீட்டுவது மீனவ மக்களாகிய நீங்கள்தான்.

### மீனவர்கள்தான் கடவுள்கள்

அதனால்தான் மீனவ மக்களை சந்திக்கும் போது ஒரு விஷயத்தை சொல்வேன். எனக்கு பொதுவாக இறை நம்பிக்கை கிடையாது. ஆனால் இன்னொருவரின் உயிரைக் காப்பாற்றுகின்ற அளவிற்கு மனதை வைத்திருக்கிறீர்களே நீங்கள்தான் உண்மையான வாழும் கடவுள்கள். மீனவ மக்கள் உங்களைத்தான் நான் கடவுளாகப் பார்க்கிறேன்.

எனவே மீனவ மக்களுக்கு தமிழ்நாடு அரசும், நம் முதலமைச்சர் அவர்களும் என்றைக்கும் துணை நிற்பார்கள். நீங்கள் அவருக்குத் துணை நிற்பீர்கள் என்று நம்புகிறேன். 2023ஆம் ஆண்டு மிக்ஜாம் புயல் அடித்த போது இங்கேயே வந்து உங்களையெல்லாம் சந்தித்து ஆறுதல் சொன்னார் நமது முதலமைச்சர். நிவாரண பொருட்கள் கொடுத்தார். உங்களுக்கான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கிறதா என்று தொடர்ந்து ஆய்வு செய்தார்.

நம் முதலமைச்சர் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி அணி மீண்டும் 2026ஆம் ஆண்டு ஆட்சி அமைக்க வேண்டும் என்று நமது முதலமைச்சர் சூளுரைத்துள்ளார். 234 தொகுதிகளில் குறைந்தது இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்று காட்டுவோம் என்று தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார். மீனவ மக்கள் உங்கள் மீது இருக்கின்ற நம்பிக்கையின் வெளிப்பாடுதான் அதற்குக் காரணம். நீங்கள் அனைவரும் ஏதோ வந்தோம், படகுப் போட்டியில் கலந்து கொண்டோம், நலத்திட்ட உதவிகள் வாங்கினோம் என்று இல்லாமல் அடுத்த ஒரு வருடம் கழகத்திற்காகப் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

மீண்டும் நம் கழகம் ஆட்சியில் அமர வேண்டும். ஏழாவது முறையாக நம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைய வேண்டும், நம் தலைவர் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் அமர வேண்டுமென்றால் அதற்கு உங்களின் பங்களிப்பு முக்கியம் என்பதை நீங்கள் மக்களிடம் எடுத்துச்சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த சிறப்பான படகுப் போட்டியை ஏற்பாடு செய்த அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்களுக்கும், அவரோடு துணை நின்ற அத்தனை பேருக்கும், நிர்வாகிகளுக்கும், இளைஞர் அணி தம்பிமார்களுக்கும், வந்து கலந்துகொண்ட மீனவ சமுதாய மக்கள் அனைவருக்கும் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன், மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், பிரபாகர் ராஜா உள்ளிட்ட பலரும் இதில் கலந்துகொண்டனர்.